சுருக்கம்

நல வாரியங்கள்–தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியம்–2007–2008–ஆம் ஆண்டு ரூ.3,00,000/–செலவில் 100 தொழிலாளர்களுக்கு மின்சாரத்தால்இயக்கப்படும் சக்கரம் இலவசமாக வழங்குதல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் (ம)வேலைவாய்ப்புத்(ஐ1) துறை

அ.ஆ.(டி) எண். 495 நாள்28.6.2007

படிக்க:–

1. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்நல வாரியச் செயலாளரின் கடிதம் .எண்.192/2007 நாள் 27.3.2007.
2. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.டி1/16123/07 நாள் 29.3.2007.

அ.ஆ.(டி) எண். நாள்

ஆணை

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியச் செயலாளர் தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்நல வாரியம் 1.9.2006 முதல் செயல்பட்டு வருகிறது என்றும் இவ்வாரியத்தை பொறுத்தமட்டில் ஒரே மாதிரியான நல நிதி உதவிகள் கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, விபத்து மரணம் மற்றும் இயற்கை மரண உதவி, ஈமச் சடங்கு உதவி கண் கண்ணாடி வாங்குவதற்கான உதவி மற்றும் ஓய்வூதிய சலுகைகள் செயல்படுத்தப்படுகின்றன என்றும் இவ்வாரியத்தில் 2013 பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்கள் வாரியத்தில் பதிவு செய்து கொண்டுள்ளனர் என்றும் இவ்வாரியம் பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு

தொழில் சார்ந்த திட்டம் அறிமுகப்படுத்தப்ட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் எனவே அவர்களுக்கு மின்சாரத்தால் இயக்கப்படும் :வண்டிச் சக்கரம்" இலவசமாக வழங்கப்படவுள்ளது என்றும் கிராமங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு மரத்திலான சக்கரம் சொந்தமாக இல்லாத காரணத்தினாலும், மண்பாண்டப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், தொழிலாளர்களுக்கு சக்கரம் வாங்குவதற்கு போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தாலும் தகுதியான பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கு மின்சாரத்தால் இயக்கப்படும் "வண்டிச் சக்கரங்களை" ஒவ்வொரு வருடமும் இலவசமாக வழங்கி அவர்களது வருவாயையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மின்சாரத்தால் இயக்கப்படும் வண்டிச் சக்கரத்தின் விலை ரூ.3,000/– (உத்தேசமாக) ஆகும் என்றும் ஒவ்வொரு ஆண்டும் பதிவு பெற்ற உடலுழைப்புத் தொழிலாளர்கள் 100பேருக்கு மேற்குறிப்பிட்ட மின் வண்டிச்சக்கரம் இலவசமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் இதற்காகும் மொத்த செலவினம் ரூ.3 லட்சம் (உரிய விலைக்குள் கட்டுப்படுத்தப்படும்) இத்தொகையை அரசு மானியத்தில் வழங்கப்படும் என்றும் வாரியச் செயலாளர் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட உதவியைப் பெறுவதற்கான நிபந்தனைகளை கீழ்கண்டவாறு வாரியச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அ) வாரியத்தில் ஓர் ஆண்டுக்காலம் பதிவு பெற்றவராக இருக்க வேண்டும்.

ஆ) சக்கரம் வழங்கும் தினத்தன்று வாரியத்தில் குறிப்பிட்ட தொழிலில் பதிவு பெற்ற தொழிலாளியாக இருக்க வேண்டும்.

இ) ஏற்கனவே சொந்தமாக சக்கரம் வைத்துள்ளவராக இருத்தல் கூடாது" .

2. மேற்குறிப்பிட்ட தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்நல வாரியச் செயலாளரின் கருத்துருவை தொழிலாளர் ஆணையர் பார்வை இரண்டில் கண்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்கள் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை மானியக் கோரிக்கையின் போது வெளியிட்ட 2007–2008–ஆம் ஆண்டுக்கான புதிய அறிவிப்புகளில் தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு ரூ.3,00,000/– அரசு மானியத்தில், மின்சாரத்தால் இயக்கப்படும் சக்கரம் இலவசமாக கழங்கப்படும் என்றும் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். அதற்கிணங்க மேற்குறிப்பிட்ட கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்தது.

4. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மின்சாரத்தினால் இயக்கப்படும் சக்கரங்களை இலவசமாக வழங்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

அ) வாரியத்தில் ஓர் ஆண்டுக்காலம் பதிவு பெற்றவராக இருக்க வேண்டும்.

ஆ) சக்கரம் வழங்கும் தினத்தன்று வாரியத்தில் குறிப்பிட்ட

தொழிலில் பதிவு பெற்ற தொழிலாளியாக இருக்க வேண்டும்.

இ) ஏற்கனவே சொந்தமாக சக்கரம் வைத்துள்ளவராக இருத்தல் கூடாது” .

2007–08–ல் 100 தொழிலாளர்களுக்கு மின்சாரத்தால் இணக்கப்படும் ஒரு வண்டிச் சக்கரத்தின் விலை ரூ.3000/– (உத்தேசமாக) என்ற வீதத்தில் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம்) செலவில் வழங்க அரசு ஆணையிடுகிறது. இச்செலவினத்தை அமைப்பு சாரா தொழிலாளர்நல வாரியத்திற்கு நடப்பு நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.516.04 லட்சம் தொகையை மேற்கொள்ள தொழிலாளர் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5 இந்த அரசாணை நிதித்துறை அ.சா.கு.எண்.

இசைவுடன் வெளியிடப்படுகிறது.

பெறுநர்

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006

செயலர், தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்நல வாரியம்,
சென்னை–600 034
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 035
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 009
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–600 005
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009
நகல்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்

நிதித்துறை, சென்னை–600 009
மாண்புமிகு தொழிலாளர்நல அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு செயலரின் நேர்முக உதவியாளர்
சென்னை–600 009